

தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலத்திற்குட்பட்ட பகுதி மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில் மக்கள் குறை தீர்க்கும் முகாம் கிழக்கு தாம்பரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ். மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், மண்டலகுழு தலைவர் எஸ் இந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மாற்றுத்தினாளிகள் கூடுதல் சக்கரம் பொருத்தப்பட்ட வாகனம், கர்ப்பிணி தாய்மார்களுக்கு சத்துணவு பெட்டகம், மக்களை தேடி மருத்துவம் மூலம் மருத்துவ பெட்டகங்கள் பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீடு அட்டைகள், பயனாளிகளிக்கு பிறப்பு சான்றிதழ், பயனாளிகளுக்கு மின்சார இணைப்பு பெயர் மாற்றிய ஆணைகள் போன்ற நலதிட்ட உதவிகளை வழங்கினார். பின்னர் வீட்டுமனை பட்டா, புதிய மின் இணைப்பு மற்றும் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை மாற்றுதல், வேலைவாய்ப்பு தேவை, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடு ஒதுக்கிதர வேண்டும் போன்ற பல்வேறு குறைகளை முன்னிருத்திய புகார் மனுக்களை பொது மக்களிடமிருந்து பெற்றார், இதனையடுத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் நலசங்க நிர்வகிள், மற்றும் அரசு அதிகாரிகள். கலந்துக்கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் கலந்துக்கொண்ட அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொது மக்களின் குறைகளை அதிகாரிகள் விரைந்து சரி செய்திடவேண்டும், மனுகள் மீது அலச்சியம் காட்டாமல் தீர்வு காணும்படி அறிவுறுத்தினார்.




தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (20.02.2025) சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆய்வு கூட்டம் அரசு கூடுதல் செயலாளர் டாக்டர்.கா.மணிவாசன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் முன்னிலையில் நடைபெற்றது, பிறகு மதிய வேளையில் சமையல் கலை நிபுணர் டாக்டர் தாமோதரன் (CHEF DAMU) அவர்களால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் சமையல் கலைஞர்களுக்கு பயிற்சி பட்டறையும் நடைபெற்றது.

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# பம்மல் தெற்குப் பகுதி தி.மு.க.செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் பம்மல் வே.கருணாநிதி அறிக்கை!

சென்னை பிப்:22

பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. செயற்குழு கூட்டம் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில்,6வது வட்ட கழக செயலாளர் வி.எஸ். ஜெகநாதன் வரவேற்புரையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர்,பகுதி துணை செயலாளர் என். பன்னீர்செல்வம்,பா. கவிதா,துரை இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா.டில்லி,மாநகர பிரதிநிதி பி.ஜே.வேந்தன், என்.கே.ரவிச்சந்தின்,இரா. கந்தவேலு,ரா.கோகுல்,

சு.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் பம்மல் எஸ்.எஸ்.மஹாலில் இன்று ( 22.2.2025 சனிக்கிழமை ) மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டதில் கழக பொருளாளர் கழக மக்களவைக்கு குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்-காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன்,பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ. கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்-தாம்பரம் மாநகர செயலாளர் எஸ். ஆர்.ராஜா, மாநகராட்சி மேயர்-தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் க.வசந்தகுமாரி, மாநகராட்சி துணை மேயர்-தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ. காமராஜ்,பல்லவரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன்,பம்மல் வடக்கு பகுதி செய லாளர் த.ஜெயக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட வட்ட கழக செயலாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள்,மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள்,பாக முகவர்கள்(BLA-2), கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள்:-

மார்ச்-1 தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் பிறந்தநாள் விழா.

மார்ச்-28ல் தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம்.

வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல்.

கழக வளர்ச்சி பணி.

### இந்தியாவிலேயே தலை சிறந்து விளங்கக் கூடிய

# தமிழ்நாடு மருத்துவத்துறையின் கட்டமைப்பு!

## மகாராஷ்டிரா சுகாதாரத் துறை அமைச்சர் – குழுவினர் பார்வையிட்டு

## அமைச்சர் மா.சுப்பிரமணியனுடன் ஆலோசனை!

சென்னை பிப்:22

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை நேற்று (21.02.2025) சென்னை, தமிழ்நாடு மருத்துவ சேவை கழக (TNMSC) அலுவலகத்தில் மகாராஷ்டிரா மாநில சுகாதாரத்துறை அமைச்சர் பிரகாஷ்ஜி அபித்கர் (Shri.Prakashji Abitkar) அவர்கள், சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி. மேகனா போர்டிகர் (Smt. Meghana Bordikar) மற்றும் குழுவினர் சந்தித்து தமிழ்நாடு மருத்துவத்துறை கட்டமைப்பு பற்றி கேட்டறிந்தனர். பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மகாராஷ்டிரா மாநிலத்தின் பொது சுகாதாரத்துறையின் அமைச்சர் அவர்களும், இணை அமைச்சர் அவர்களும், பெரு மதிப்பிற்குரிய பிரகாஷ்ஜி அபித்கர் (Shri. Prakashji Abitkar) அவர்கள், திருமதி.மேகனா போர்டிகர் (Smt.Meghana Bordikar) ஆகிய இரு அமைச்சர்களும் அம்மாநிலத்தின் சிறப்பு பொது சுகாதாரத் துறையின் அலுவலர்கள் பெருமதிப்பிற்குரிய மகாராஷ்டிரா மாநில முதலமைச்சரின் செயலாளர் ஸ்ரீகர் பர்தேசி (Shri.Shrikar Pardeshi, IAS) பொது சுகாதாரத்துறை செயலர்I நிபுன் விநாயக் (Shri.Nipun Vinayak,IAS) பொது சுகாதாரத்துறை செயலர்II வீரேந்திர சிங் (Shri.Virendra Singh, IAS) மருத்துவம் பொருட்கள் கொள்முதல் ஆணையம் தலைமை நிர்வாக அதிகாரி மகேஷ் அவாத் (Shri.Mahesh Awhad, IAS) போன்ற பன்னிரெண்டு உயர் அலுவலர்களோடு தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பு குறித்து ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். நேற்றைக்கும் இன்றைக்குமாக பல்வேறு இடங்களில் தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்புகளை தொடர்ந்து ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு என்பது 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களையும், 36 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளையும் 2 பன்னோக்கு மருத்துவமனைகளையும், 8,713 துணை சுகாதார நிலையங்களையும், 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களையும் கொண்டிருக்கிற ஒரு மகத்தான மருத்துவக் கட்டமைப்பு.

இந்த கட்டமைப்புகளின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்படி, கடந்த 4 ஆண்டுகளாக மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்48, இதயம் காப்போம், பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம்பெறுவோம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், மக்களைத்தேடி மருத்துவ ஆய்வகத் திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டங்கள் குறித்தான விளக்கங்கள் எல்லாம் அவர்களுக்கு நம்முடைய துறையின் உயர் அலுவலர்கள் விளக்கியிருக்கிறார்கள். 2 அமைச்சர்கள் கொண்ட இந்த குழுவானது, நேற்றைக்கு நந்திவரத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்த்திருக்கிறார்கள். தொடர்ந்து காஞ்சிபுரத்தின் மாவட்ட தலைமை மருத்துவமனையை பார்த்திருக்கிறார்கள். இன்று சென்னை, ஓமந்தூரார் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் மருத்துவ சேவையை பார்த்திருக்கிறார்கள். அதேபோல் தற்போது தாய் மற்றும் பிறந்த குழந்தைகள் பராமரிப்பு மருத்துவமனை எழும்பூரில் அதையும் பார்த்திருக்கிறார்கள். TNMSC என சொல்லப்படுகிற தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தில் இதனுடைய செயல்பாடு குறித்தும் கேட்டறிந்திருக்கிறார்கள். அந்த வகையில் இரு அமைச்சர்கள் தலைமையிலான இந்த குழுவினர் தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பினை கடந்த 2 நாட்களாக சுற்றிப்பார்த்து ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும் தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார அமைப்பு, கொள்முதல், விநியோகம் மற்றும் மருத்துவ சேவையை வலுப்படுத்தும் விதம் போன்ற சிறந்த நடைமுறைகள் மருத்துவ திட்டங்களை பற்றிய தொகுப்புகளை பெற்றும் அவர்களது மாநிலத்தில் நடைமுறை படுத்தவிருக்கிறார்கள் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் மரு.உமாநாத், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அரவிந்த், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் வினித், மகாராஷ்டிரா மாநில முதலமைச்சரின் செயலாளர் ஸ்ரீகர் பர்தேசி (Shri.Shrikar Pardeshi, IAS) பொது சுகாதாரத்துறை செயலர்I நிபுன் விநாயக் (Shri.Nipun Vinayak,IAS) பொது சுகாதாரத்துறை செயலர்II வீரேந்திர சிங் (Shri.Virendra Singh, IAS) மருத்துவம் பொருட்கள் கொள்முதல் ஆணையம் தலைமை நிர்வாக அதிகாரி மகேஷ் அவாத் (Shri. Mahesh Awhad, IAS) தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மகாராஷ்டிரா மாநில பொது சுகாதாரத்துறை இயக்குநர் நிதின் அம்பேத்கர் (Shri.Nitin Ambadekar) மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சைதாப்பேட்டை –

# ஜாபர்கான்பேட்டையில் விளையாட்டுகளுக்கான பயிற்சி மையம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 22-

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 139க்குட்பட்ட ஜாபர்கான்பேட்டை, ஆர்.ஆர்.காலனியில் மேயர் அவர்களின் 2023 24ஆம் ஆண்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 37 லட்சம் மதிப்பில் குத்துச்சண்டை, கேரம், சதுரங்கம் ஆகிய விளையாட்டுகளை உள்ளடக்கிய பயிற்சி மையத்திற்கான பல்நோக்குக் கட்டடத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் (21.02.2025) அன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, ஜாபர்கான்பேட்டை சென்னை உயர்நிலைப் பள்ளி, சென்னை தொடக்கப்பள்ளி மற்றும் ஆர். வி.நகர் சென்னை தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகள் இணைந்து நடத்தும் முப்பள்ளிகளின் ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, படிப்பில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவிகள் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் உள்ளிட்ட சிறந்த மாணவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார்.

இவ்விழாக்களில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு. வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மத்திய வட்டார துணை ஆணையர் திரு. கே.ஜெ,பிரவின் குமார், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் திரு.த.விஸ்வநாதன், மண்டலக்குழுத் தலைவர் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திரு.ப.சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி - மாணவர் அணி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் –இரா.ராஜீவ்காந்தி பங்கேற்பு! ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமை!

காஞ்சிபுரம், பிப். 22-

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஜனார்த்தனன், மாணவர் அணி அமைப்பாளர் ர.பிரபு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (23.2.2025 - ஞாயிற்றுக்கிழமை), காலை 9-30 மணியளவில் பெரியபணிச்சேரி கோவிந்தராஜ் திருமண மஹாலில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ். ஜனார்த்தனன் மற்றும் மாணவர் அணி அமைப்பாளர் ர.பிரபு வரவேற்புரை யாற்றுகின்றனர்.

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் மற்றும் மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் : எம்.ஆர். நவீன்ராஜ் வெ.கவிபாரதி கு. பிரவீன்குமார் கு.தமிழ்வாணன் செ.இமான் கௌதம் செ.அரிபிரசாத் வெ. வசந்த்குமார், பா.மகேஸ்வரன், ரா. அரிபாபு, து.நாராயணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் அமைச்சர் - காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை யாற்றுகிறார்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர், கழக மாணவர் அணி தலைவர் இரா.ராஜீவ்காந்தி ஆகியோர் பங்கேற்க கின்றனர். குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு , தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வீ.விஜயகுமார், டி.கே.கமலக்கண்ணன், கோ.ஜானகிராமன் , ப.ராமமூர்த்தி, கே.மணிகண்டன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், பொன்.ஜீவா, கே.வசீகரன் பூங்கொடி அரசு , எஸ்.ராஜாதேசிங்கு , எஸ்.சந்தானம் , பா.ராஜேந்திரன், எஸ்.கே.துளசிங்கம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் தி.க.பாஸ்கரன் , டி.எஸ்.எம்.ஜெயகரன், டி. ஆர்.சாரதிபெரியநாயகம் , ப.குமரவேல் , தா.அன்பழகன் , தமிழரசி சுரேஷ் , சுலைமான் சையத் ஆகியோர் கலந்து கொண்டு நடக்க இருக்கும் பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கிளை கழக இளைஞர்அணி மற்றும் மாணவர்அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: வருகின்ற மார்ச் 1 கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்பிறந்தநாள்விழா, 2026-ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தல் பணிகள், கழக வளர்ச்சி,

குறிப்பு: கூட்டத்திற்கு வருகை தரும் இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் வெண் சீருடையில் வர வேண்டுமாய் கேட்டுகொள்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பால் உற்பத்தியாளர்களுக்கு 3000 பால் பக்கெட்டுகள், 3000 தென்னங்கன்றுகள், விவசாய கூலி தொழிலாளர்களுக்கு உபகரணங்கள், கட்டிட தொழிலாளர்களுக்கான உபகரணங்கள், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கான உபகரணங்கள், எல்.பி.எஃப். ஆட்டோ தொழிற்சங்க ஓட்டுநர்களுக்கான சீருடை, மலைவாழ் மக்கள் மற்றும் அருந்ததியின மக்களுக்கு மளிகை பொருட்கள், அரிசி மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் உள்ளிட்ட 3000க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா வழங்கினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சி.ஆர்.ராமச்சந்திரன், பா.அருண்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்திரன், அஷ்ரப் அலி, ஒன்றிய செயலாளர் சுரேந்திரன் மற்றும் நிர்வாகிகள் நடராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# 63(அ) வட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு. சின்னராஜ் அறிவிப்பு!

சென்னை, பிப். 22-

சேப்பாக்கம் பகுதி 63 (அ) வட்ட செயலாளர் மு. சின்னராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேப்பாக்கம் பகுதி 63 அ வட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (22/02/2025 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் ஜெயபாரத் ஷெட் (கோபால்தாஸ் சாலை, சென்னை600 002)ல் சேப்பாக்கம் பகுதி செயலாளரும் 9ஆவது மண்டலகுழு தலைவருமான எஸ். மதன்மோகன் முன்னிலையில் வட்ட அவைத்தலைவர் டி. அயூப்கான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து அணிகள் அமைப்பாளர்களும், வட்டதுணை அமைப்பாளர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2025 மார்ச் 1 அன்று கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக ஆக்க பணிகள் 6 இவ்வாறு வட்டச் செயலாளர் மு.சின்னராஜ் அறிக்கையில் தெரிவித்துளார்.

இவ்வாறு வட்ட செயலாளர் மு. சின்னராஜ் அறிக்கை விடுத்துள்ளார்.



நேற்று (21.02.2025) உலகத் தாய்மொழி நாளினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, உதவி ஆணையாளர் (பொ.நி.(ம.)ப.) செல்வி உமா மகேஷ்வரி, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.